கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

ஐப்பசி மாத இதழ்
NEWS BULLETIN
OCTOBER 2025
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
22/11/2025	45 Blondvil St Coventry CV3 5EQ ல் தமிழ்ப் பாடசாலை நடைபெறும்
22/11/25	காலை ஒன்றுகூடலில் மாவீரர் நினைவேந்தல்
06/12	ஆண்டு விழா

SATURDAY	Time
Tamil	9.45am-12.30pm
Free Karate (Mr. Prathith Piries)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Vocal (Carnatic) (Mr. Dheenadayalan Pathmanathan)	12.30pm – 2.30pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	1.00pm – 5.00pm
Free 11plus Verbal & Nonverbal (Mrs. Gayathri Kirish)	2.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri Jeyaseelan)	11.00am – 3.00pm
Vocal (Carnatic) (Mrs. Vanathy Sureskumar)	9.00am – 1.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	11.30am –12.30pm
Miruthangam (Mr.Wijayarajah Mayilvaganam)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani Saravanathasan)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Tamil	11.30am –12.30pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar Devaraj)	10.00am –12.00am
Free 11plus Maths (Mr.Krish)	9.00am – 11.00am



நவராத்திரி விழாவில் நவரச நிகழ்வுகள்

கொவன்றீஸ்வரம் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் நவராத்திரி விழாவில், 01/10/2025 அன்று கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக வீணை ஆசிரியை, மற்றும் கலைப்பாட மாணவர்கள் கலைநிகழ்ச்சிகளை வழங்கியிருந்தனர்.

நடன ஆசிரியர்களில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "நுண்கலைமானி" ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்விகள் வைஷாலி காண்டீபன், ஆராதனா ரமேஸ், இதயனி இதயகுமார் ஆகியோர் நடன நிகழ்வுகளையும்,



சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவர்கள் செல்வி ஆஷ்கா கோபிகரன், செல்வன் சஜித் கேதீஸ்வரன், செல்வன் அனுஜன் ஜெய்சங்கர், செல்வன் விஷால் காண்டீபன் ஆகியோர் சுரத்தட்டில் பக்திப் பாடல்களையும்,



வயலின் மற்றும் வீணை ஆசிரியை "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவிகள் செல்வி தருண்யா பகீரதன், செல்வி வர்ஷிதா ஜெய்சங்கர், செல்வன் சர்வேஷ்வர் கௌரிசங்கர், செல்வன் சித்தேஷ்வர் கௌரிசங்கர், செல்வி பார்கவி பாலகிருஷ்ணன், செல்வி கீர்த்தி ராஜா ஆகியோர் வயலினில் பக்திப் பாடல்களையும்,



செல்விகள் மோனிக்கா ஜெய்கணேஷ், வர்ஷிதா ஜெய்சங்கர் ஆகியோர் வீணையில் பக்திப் பாடல்களையும் “கலாஜோதி” செல்வி வாரணி சரவணதாசன் ஆசிரியை வீணையில் பக்திப் பாடலையும் வழங்கியிருந்தனர். கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு ஸ்ரீநாதன் பகீரதன் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியதோடு, பக்கவாத்தியமாக தபேலா இசையினையும் வழங்கியிருந்தார்.



கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்களையும், நிகழ்வுகளை நெறியாள்கை செய்த ஆசிரியர்களையும் ஆலய நிர்வாகத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.



கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய ஆண்டுவிழா

18/10/2025 அன்று நடைபெற்ற கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் ஆண்டுவிழாவில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பரதநாட்டிய ஆசிரியர்களில் ஒருவரான “நாட்டிய கலாநிபுண” “நுண்கலைமானி” ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகள் செல்விகள் வைஷாலி காண்டீபன், ஆரத்தி சியாமளன், இதயனி இதயகுமார் ஆகியோர் நடன நிகழ்வை வழங்கியிருந்தனர்.



தீபாவளி ஏன் கொண்டாடப்படுகிறது?

நரகாசுரன் வதம்: நரகாசுரன் என்ற அசுரனை, கிருஷ்ண அவதாரத்தில் சத்தியபாமாவின் உதவியுடன், கிருஷ்ணர் வதம் செய்தார். இந்த வெற்றியைக் கொண்டாடும் விதமாக நரகாசுரன் வதைக்கப்பட்ட நாள் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது.

இராமாயணம்: இராமன் தனது_வனவாசத்தை முடித்துக்கொண்டு, அயோத்திக்குத் திரும்பியபோது, மக்கள் தீபம் ஏற்றி வரவேற்றனர். இந்த நிகழ்வை நினைவுகூரும் விதமாகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது.

ஒளி மற்றும் நன்மையின் கொண்டாட்டம்:

தீபாவளி என்பது "தீபங்களின் ஆவளி" அதாவது "தீபங்களின் வரிசை" என்று பொருள்படும். இது இருளை நீக்கி, ஒளியைக் கொண்டுவரும் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது, மேலும் நன்மை வெற்றியின் அடையாளமாகவும் கருதப்படுகிறது.

ஆன்மீக முக்கியத்துவம்:

இது மனதின் இருளை அகற்றி, இறை அருள் கிடைப்பதற்கான நாளாகவும் கருதப்படுகிறது.

(இணையத்திலிருந்து)




கதம்பம் பல்சுவை நிகழ்வு




World peace and Harmony நடாத்தப்படும் கதம்பம் நிகழ்வில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்கள் கலைநிகழ்வுகளை வழங்கி வருகிறார்கள்.

16/10/25 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் டிர்த்தீன் ஜெயதீஸ்வரன் சுரத்தட்டு இசையையும், தரம் 7 மாணவி செல்வி திவ்யா நக்கீரன் நவராத்திரி பற்றிய பேச்சினையும் வழங்கியிருந்தனர். இம்மாத நிகழ்வுகளை கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் நிர்வாக அலுவலர் திருமதி பொன்மணி ஜெய்கணேஷ் தொகுத்து வழங்கினார்.



23/10/25 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் விஷால் காண்டீபன் சுரத்தட்டு இசையையும், தரம் 6 மாணவன் செல்வன் லக்ஸன் திருவரங்கன் பாடலையும், வயலின் மற்றும் வீணை ஆசிரியை "கலாஜோதி" செல்லி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி வர்ஷிதா ஜெய்சங்கர் வீணை இசையினையும் வழங்கியிருந்தனர்.




30/10/25 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் சஜித் கேதீஸ்வரன் சுரத்தட்டு இசையையும், தரம் 3 மாணவன் செல்வன் கவிஷன் மயூரன் நாட்டுப்புறப் பாடலையும், தரம் 4 மாணவி செல்வி டிவாஷினி ஜெகநாதன் கவிதையையும் வழங்கியிருந்தனர்.



யோகா (MEDITATION)

யோகா (Meditation) என்றால் இறையாற்றலின் இயக்க நியதியோடு மன ஆற்றலையும் உடல் ஆற்றலையும் இணைத்து, விளைவறிந்த விழிப்போடு செயலாற்றி வாழ்வதாகும். இவ்வாழ்வு தான் பெருமதிப்போடு இறைவழிபாடு என்று போற்றப்படுகின்றது.

முதலில் உடலில் அமைந்துள்ள செல்களில் அமைந்துள்ள காந்தத் துருவ அமைப்புகளைச் சீர் செய்ய வேண்டும். அதன்மூலம் தான் உடலில் இரத்தம், காற்று, காந்தம் ஆகிய மூவகை ஓட்டங்களும் முறையாக நடைபெறும். உடல் செல்களைச் சீரமைப்பதற்கு மகரிஷி அவர்கள் நமக்கு கற்றுக் கொடுத்துள்ள எளிமைப்படுத்தப்பட்ட உடற்பயிற்சி (Simplified Physical Exercises) செய்து வர வேண்டும்.



1) *கைப்பயிற்சி*
2) *கால் பயிற்சி*
3) *மூச்சுப் பயிற்சி (Neuro Muscular Breathing Exercise)*
4) *கண் பயிற்சி*
5) *மூளை ஊக்கப் பயிற்சி (கபாலபதி பயிற்சி)*
6) *மகராசனம்*
7) *உடல் வருடல் (Massage)*
8) *அக்கு பிரஷர்*
9) *உடம்பை தளர்த்துதல் – ஓய்வு தரும் பயிற்சி (Accu Pressure & Relaxation)*



ஆகிய பொதுவான பயிற்சிகளை நாள்தோறும் செய்வது அவசியம். இவற்றோடு மனமானது இறையாற்றலின் இயக்க நியதியோடு ஒன்றி அமைதி பெறும் உளப்பயிற்சியாகிய குண்டலினியோகமும் கற்று, விந்து நாத சக்தியைக் கெட்டிப்படுத்தி உடலுக்கும் உயிருக்கும் ஊட்டமளிக்கக் கூடிய காயகல்பப் பயிற்சி என்ற மனித வள சிறப்புப் பயிற்சியையும் கற்று பயிற்சி செய்து வர வேண்டும்.

ஆர்வமுள்ள சிந்தனையாளர்கள், பிறவிப்பயனை எய்த நல் வாய்ப்பாக கருதி அருகாமையில் உள்ள உலக சமுதாய சேவா சங்கத்தின் அறிவுத்திருக்கோயிலில் விபரங்கள் கேட்டறிந்து பயிற்சிகளைக் கற்றும் செய்தும் வருவதன் மூலம் பிறவிப்பயனை எய்தலாம்.

"உடலில் இரசாயன மாற்றம் ஏற்படுவதில் நமது எண்ணமும் செயலும் பெரும் பங்கு வகிக்கிறது"

"உடலுக்கும் உயிருக்கும் எப்போது பிணக்கு ஏற்பட்டாலும் அந்தப் பிணக்குதான் நோய்"

"உயிரும் உடலும் இணைந்த இந்த உறவானது நீடித்திருப்பதற்கு இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்று ஓட்டம் இவை மூன்றும் சரியாக இருக்க வேண்டும்"

வாழ் வையகம் வாழ்க வளமுடன்

-தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி-

"அருள்நிதி" திரு. கௌரிசங்கர் தேவராஜ்
கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக
யோகா ஆசிரியர்

ஈழத்துப் புலமைகள் பாகம் 32

கடந்த இதழிலே, யாழ்ப்பாணம் நீர்வேலிப் பகுதியில் வாழ்ந்த, சண்முகம்பிள்ளை அவர்களின் புதல்வனாக அவதரித்த பீதாம்பரம் புலவர் அவர்களைப் பற்றிப் பார்த்திருந்தோம்.

இவ்விதழிலே, சைவத்திற்கும், தமிழுக்கும், கிறிஸ்தவத்திற்கும், ஆங்கிலத்திற்கும் அளப்பெரிய சேவையாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

யாழ்ப்பாணம் நல்லூரில் ஞானப்பிரகாச சுவாமிகள் மரபிலே, கந்தப்பிள்ளை சிவகாமி அம்மை தம்பதிகளின் புதல்வனாகப் பிறந்தார். சிறுவயதில் நல்லூரிலே வாழ்ந்த சுப்ரமணியப் பிள்ளை என்ற உபாத்தியாரிடம் தமிழ் நெடுங்கணக்குத் தொடக்கம் மூதுரை போன்ற நீதி நூல்களையும், நிகண்டு போன்ற இலக்கண நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். இவரது திறமைகளை உணர்ந்த இவரது அண்ணன்மார் இவரை இருபாலை சேனாதிராய முதலியாரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்கும்படி அனுப்பினார்கள்.

முதலியாரிடம் கற்றபின்னர் அவரது மாணவரான நல்லூர் சரவணமுத்துப் புலவரிடம் கற்றார். இவர் ஆங்கிலம் கற்கும் பொருட்டு பீட்டர் பேசியஸ் பாதிரியாரிடம் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்தார். அங்கு ஆங்கில மொழியில் திறமையுடைய மாணவராகத் திகழ்ந்தமையினால், அதே பாடசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஆசிரியர் பணியைத் திறமையாக மேற்கொண்டதால், இவரிடம் பைபிள் எனப்படும் விவிலிய நூலை மொழிபெயர்க்கும் படி கேட்டுக் கொண்டனர். நாவலரும் ஒப்புக்கொண்டு, தன் பணியைத் தொடங்கினார். உலகிலேயே பைபிளை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர் நாவலரே. இவர் பைபிளை மொழிபெயர்த்தார் எனக் கேள்விப்பட்டு, சென்னையிலும் சிலர் மொழிபெயர்ப்புத் தொடங்கினர். எனினும் நாவலரின் மொழிபெயர்ப்பு உரைநடையே சிறந்ததெனப் பலராலும் போற்றப்பட்டது.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்)

ஆக்கம்
திரு. தவத்துரை மாணிக்கம் ஆசிரியர்.

கந்தசஷ்டி

கந்தசஷ்டி என்பது முருகக் கடவுள் சூரனை அழித்த பெருமையைச் சைவ சமயத்தவர்கள் கொண்டாடுவதாகும். சஷ்டி என்றால் ஆறு ஆகும். மாதந்தோறும் சஷ்டி திதி வந்தாலும், முருகனுக்குரிய விரத நாட்கள் வந்தாலும், ஐப்பசி மாதம் சுக்கிலபட்ச (வளர்பிறையில்) பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்களும் கந்தசஷ்டி (மகா கந்தசஷ்டி) காலமாகும். இந்த ஆறு நாளையும் சைவர்கள் விரத நாட்களாகக் கருதுகின்றனர்.

ஆறு நாட்கள் நடைபெற்ற சூரசம்காரத்தின் முடிவில், முருகன் மாமரமாக நின்ற சூரபத்மனைத் தன் சக்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவலும், மயிலுமாக மாறவும், சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக்கொண்டார். இது கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

